# குமாரனின் இடம்

Translated from the original article “The Place of the Son”

By *Mike Barton*

“*ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. மாம் சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய குமா ரர்களாயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவி யைப் பெறாமல், அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற குமாரத்துவத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.* நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்.”

“*ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவை கள் அல்லவென்று எண்ணுகிறேன். மேலும் குமாரர்கள் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத் தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற் குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம். அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக் கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறததை நம்பவேண்டுவ தென்ன? நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்*” (ரோமர் 8:12-25).

எல்லா யுகங்களையும்விட இந்த யுகத்தில், மனுக்குலம் மிகப் பெரிய மடமை என்னும் சுழிக்குள் இழுத்துச் செல்லம்பட்டுக்கொம் டிருக்கிறது; அனுமானத்தின் அடிப்படையில் வாழ்வதே அந்த மடமை; இதைத் தடுக்கமுடியாது என்பதுபோல் தோன்றுகிறது. தேவனுடைய சத்தியத்தைவிட மனிதனுடைய சொந்தக் கற்பனைகளை உம் மையென ஏற்றுக்கொள்வதே மடமையின் உச்சம். நமக்கு இது வேண்டும், அது வேண்டும், இதுவும் அதுவும் இல்லாவிட்டால் நம்மால் வாழ முடியாது என்று இந்த உலகத்தின் விளம் பர முறைமைகள் நம்பத்தகுந்தமுறையில் பறைசாற்றுகின்றன. எனவே, இந்த விளம்பரங்கள் முழுச் சத்தியம் என்று சொல்வதை உடனே உண்மையென்று ஏற்றுக்கொள்ளும்படிக்கு நாம் கட்டாயப்படுத் தம்படுகிறோம். தங்கள் வருமானத்தைப் பெருக்குவதற்காக, விளம்பர இயந்திரங்கள் சத்தியம் என்று சாதிப்பதை நாம் நம்பித்தான் ஆகவேண்டும் என்று அவைகள் தீவிரமாகக் கூறுகின்றன. இதுதான் உண்மை, நாம் இதை நம்பிவாழ்ந்து, நல்ல வாழ்க்கைக்குத் தேவையானவை என்று நாம் நம்புகிறவை களை வாங்குவோம், வாங்குவோம், வாங்கிக்கொண்டேயிருப்போம்.

தேவனுடைய எதிரியாகிய சாத்தானும் இயேசுவை வனாந்தரத்தில் சோதித்தபோது இதே யுக்தியைத் தான் கையாண்டான். இயேசு, பிதாவைப்பற்றிய தன் தனிப்பட்ட அறிவினால், “என்று எழுதியிருக் கிறதே” (மத். 4:1-11) என்று கூறி அவனை எதிர்த்துத்தாக்கினார். சர்வவல்லமையுள்ள ஆவியான வரால் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையைக்கொண்டு இயேசு தம் எதிரியை எதிர்கொண்டார்.

## குமாரனின் இடம்

தம் சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கும், அதன் நிறைவுக்குள் நம்மை நடத்துவதற்கும் தேவன் தம் வார்த்தையையும், தம் பரிசுத்த ஆவியானவரையும் நமக்குத் தந்திருக்கிறார். இயேசுவைப்போல், எழு தப்பட்டிருப்பதால் வாழ வேண்டும்—என்ன எழுதியிருக்கிறது என்று நாம் **அனுமானிம்பதின்படி** அல்ல,

மறாகப் பரிசுத்த ஆவியானவரால் பிரகாசிப்பிக்கப்பட்டதின்படி நாம் வாழ வேண்டும். தேவனுடைய ஒரேபேறானவராகிய இயேசு ஆவியானவரால் நடத்தப்பட்டதுபோல, நாமும் பரிசுத்த ஆவியானவ ரால் நடத்தப்படவேண்டும் (ரோமர் 8:14).

நாம் "மறுபடிபிறப்பதின்"மூலம், தேவன் நம்மை சுவிகாரம் எடுத்துக்கொள்கிறார் என்றும், அதனால் நாம் தேவனுடைய குமாரன் என்ற அந்தஸ்துக்குக் கிருபையால் தானாகவே வந்துவிடுகிறோம் என்றும் அநே கர் அனுமானித்துக்கொள்கிறார்கள். இதற்கு அவர்கள் மேலே கூறப்பட்டுள்ள பத்தியை ஆதாரமாகக் கருது கிறார்கள். எனவே, பிதாவானவர் கொடுத்த எல்லா வாக்குத்தத்தங்களையும், குமாரனுக்குரிய எல்லா உரிமைகளையும், உடனே பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். "கிறிஸ்து எல்லாவற்றையும் செய்துமுடித்துவிட்டார்; ஆகையால், நமக்கு **இப்போது** சுதந்தரிக்கும் முழு உரிமை உண்டு. அவருடைய வருகைக்காகக் காத்திருப்பதைத்தவிர நாம் வேறொன்றும் செய்யத் தேவையில்லை," என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், இதுதான் முழுச் சத்தியமா? என்ன எழுதியிருக்கிறது?

### "புத்திரசுவிகாரத்தைப்" புரிந்துகொள்ளுதல்

நாம் மேலே குறிப்பிட்டுள்ள பத்தியில், "*நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந் தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே,*" என்று பவுல் கூறுகிறார். சுதந்தரராக இருக்க என்ன தகுதி என்று பவுல் கூறுகிறார். "*எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய குமாரர்களாயிருக்கிறார்கள்*" (வ. 14) என்றும், "*கிறிஸ்துவுடனேகூட நாம் மகி மைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்,*" (வ. 17) என்றும் பவுல் கூறுகிறார். இதைத் தொடர்ந்து "*இனி நம்மிடத்தில் வெளிப்படும்*" மகிமையைப்பற்றி அவர் பேசுகிறார். அதன்பின், அவர், "*குமாரர்கள் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிரும் பதைம்பற்றி*" பேசுகிறார் (வ. 19). "*இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேத னைம்படுவதைம்பற்றி*" அவர் பேசுகிறார் (வ. 22). அதன்பின், "*அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன் களைம் பெற்ற நாமுங்கூட* நம்முடைய சரீர மீட்பாகிய **புத்திரசுவிகாரம்** *வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்,*" என்று அவர் கூறுகிறார் (வ. 23). அடுத்து, "*அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கம்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண் கிறதை நம்பவேண்டுவதென்ன? நாம்* **காணாததை** *நம்பினோமாகில், அது வருகிறதற்கும் பொறுமை யோடே காத்திருப்போம்,*" என்று அவர் கூறும்போது அவர் அதைச் சேர்த்து எழுதுகிறார் (வ. 24-25).

இந்தப் பத்தி ரோமர்களிடையே இருந்த தத்தெடுக்கும் பழக்கத்தைக் குறிக்கிறது என்று அநேகர் கருது கிறார்கள்; அவர்களுடைய பழக்கத்தின்படி ஒருவருடைய குழந்தையை இன்னொருவர் சட்டப்படி தன் குழந்தையாக ஏற்றுக்கொள்ள முடியும்; அப்படி ஏற்றுக்கொள்ளும்போது அந்தக் குழந்தை தத்தெடுத்த வரின் சொந்தக் குழந்தையாகக் கருதப்பட்டது. அந்தக் குழந்தை தன்னைத் தத்தெடுத்தவருக்கு இருந்த சமுதாய அந்தஸ்தைப் பெற்றது, அவருடைய சொத்துக்கு வாரிசாக மாறியது, அவருடைய சுமைகளுக் கும் உரிமைகளுக்கும் பங்குதாரராக மாறியது. இந்தச் சடங்கில் ஆவிக்குரிய ஒரு பரிமாணமும் இருந் தது. தத்தெடுக்கப்பட்ட குழந்தை எழுத்துப்பிரகாரம் தத்தெடுத்தவருடைய ஆத்துமாவோடும், ஆவி யோடும் ஒன்றாக மாறியது என்றும், ஆகையால் அந்தக் குழந்தையால் தத்தெடுத்தவருடைய வழிமர பைத் தொடர முடியும் என்றும் அவர்கள் விசுவாசித்தார்கள். இது ரோமர்களுக்கே உரித்தான நூதன மான ஒரு கோட்பாடு; இது ரோமன் கத்தோலிக்க சபையால் "தத்தெடுக்கப்பட்டு," கடந்து நூற்றாம் டு களில் பல்வேறு மொழிபெயர்ப்புகள்மூலம் சென்று, இப்போது நம்மை வந்தடைந்திருக்கிறது.

ஆயினும், இந்தக் கோட்பாடு அந்த நாட்களில் வாழ்ந்த கிரேக்கர்களுக்கும், யூதர்களுக்கும் தெரியாது. வேதாகமத்தின் நாட்களில் இந்தப் பழக்கம் ரோமர்களிடையே மட்டுமே இருந்தது; மற்ற கிழக்கத்திய நாடுகளில் இந்தப் பழக்கம் இருக்கவில்லை. கிரேக்கர்களின் மொழியிலோ அல்லது யூதர்களின் மொழியிலோ இதற்கு ஒரு வார்த்தைகூட இருக்கவில்லை. தத்தெடுத்தல் என்ற வார்த்தை *adoptare* என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வருகிறது. *Ad* என்றால் "க்கு" என்றும், *optare* "தெரிந்தெடு" என்றும் பொருள். இது பெரும்பாலும் தத்தெடுப்பதைப்பற்றிய மேற்கத்திய கருத்தோடு தொடர்புடையது. ரோமர் களுடைய இந்தக் கருத்திலிருந்து நாம் அநேக ஒப்புமைகளை எடுக்க முடியும். ஆனாலும், அங்கு ஏதோவொன்று இன்னும் குறைவுபடுகிறது. நாம் இந்த முறையில் தத்தெடுக்கப்பட்டால், பவுலைப்

போல், புத்திரசுவிகாரத்திற்காக நாம் ஏன் இன்னும் காத்திருக்க வேண்டும்? நம்மிடம் ஏற்கெனவே இருக்கிற ஒன்றுக்காக நாம் ஏன் நம்பிக்கையோடு இருக்க வேண்டும்?

தத்தெடுப்பதைப்பற்றிய ரோமர்களுடைய/மேற்கத்திய கருத்து ஓர் "**அனுமானம்.**" இந்த அனுமானத் தின்படி "மறுபடி பிறக்க"வேண்டிய தேவையும், ஆவிக்குரிய முதிர்ச்சியடைய வளர வேண்டிய தேவை யும் அங்கு இல்லை. தேவன் தம்முடைய குறிக்கோளின் முழு நிறைவுக்கு நம்மைக் கொண்டுவருகிற அவருடைய வழிகளைத் தவறாகப் புரிந்துகொள்வதால், இப்படி அனுமானிக்கும் நபர் தான் பாதுகாப் பாக இருப்பதாகப் பொய்யாக நினைத்துக்கொள்கிறார்.

நாம் பொதுவாகப் புரிந்துகொள்வதுபோல, மூல கிரேக்க வேதவாக்கியங்கள் தத்தெடுத்தல் என்பதைக் குறிப்பிடவேயில்லை. தத்தெடுத்தல் என்பதற்கான கிரேக்க வார்த்தை *Huiothesia*. இதற்குக் குமாரனாக வைத்தல் என்று பொருள். "தத்தெடுத்தல்" என்ற அதே வார்த்தைதான் "குமாரத்துவம்" (ரோமர் 8:15) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்தப் பத்தி குமாரன் என்ற நிலைமையில் வைப் பதைம்பற்றியும், அந்த இடத்துக்கு நம்மை நடத்த பரிசுத்த ஆவியானவர் கொடுக்கம்பட்டிரும்பதைம் பற்றியும் பேசுகிறது. எனவே, "குமாரனாக வைத்தல்" என்றால் என்ன பொருள்?

## குமாரனாக வைக்கம்படுதல்

கிறிஸ்து வாழ்ந்த நாட்களில், கிழக்கத்திய நாடுகளில், யூத மக்களைப் பொறுத்தவரை "குமாரனாக வைத்தல்" மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும்; ரோமர்களும் இதைப் புரிந்துகொண்டார்கள்; ஏனென் றால், அவர்கள் அந்தப் பிராந்தியங்களில் சம்பந்தப்பட்டிருந்தார்கள். ஒரு யூதத் தகப்பன் தன் சொந்தப் பிள்ளையைத்தவிர வேறு யாரையும் இந்த முறையில் ஒருபோதும் தன் "குமாரனாகத்" "தத்தெடுக்க" மாட்டான். அவனுக்கு வாரிசே இல்லையென்றால் ஒருவேளை இப்படி தத்தெடுக்கக் கூடும். பிறம் பினால்தான் ஒருவன் ஒரு தகப்பனுடைய பிள்ளையாக மாறினான்; ஆயத்தமும், பயிற்சியும் "குமா ரனாக வைக்கப்படுதல்" என்னும் அந்தஸ்துக்கு அவனைக் கொண்டுவந்தன. ஒரு குமாரனாக இருப் பதற்கும், ஒரு பிள்ளையாக இருப்பதற்கும் (தகப்பனுடைய பிள்ளையாக இருந்தாலும்கூட) இடையே குறிப்பிடத்தக்க வித்தியாசம் இருந்தது.

குறிப்பாகப் பணக்கார வீடுகளில் பொதுவாக ஒரு பழக்கம் இருந்தது; அந்தக் குடும்பங்களில் இருந்த ஆண்பிள்ளைகள் அந்தக் குடும்பத்தில் இருந்த நம்பத்தகுந்த ஒருவரால் (பெரும்பாலும் கொத்தடிமை களால்) தகப்பனுடைய வாழ்க்கை முறைக்கும், தகப்பனுடைய குறிக்கோள்களுக்கும் ஏற்றபடி "வளர்க் கப்பட்டார்கள்." ஏழைக் குடும்பங்களில் இந்த வேலையைத் தாய்மார்கள் செய்தார்கள். குழந்தை கள் தங்கள் வாரிசுரிமையை ஏற்பதற்குத் தேவையான எல்லாவற்றிலும் கல்வியும், பயிற்சியும், சிட்சை யும் பெற இந்த ஆசானிடம் ஒப்புவிக்கப்பட்டார்கள். அவர்கள் "சட்டநிறைவு வயதடையும்வரை" இந்த உறவும், பயிற்சியும் தொடர்ந்தன. இந்தக் குழந்தை சட்டநிறைவு வயதடைந்தவுடன் தன் தகப்பனுக் குரிய எல்லாவற்றுக்கும் வாரிசாகிவிடும்; இருந்தாலும், அந்த வயதடையும்வரை, அவன் ஒரு பிள்ளையாக மட்டுமே கருதப்பட்டான். இன்னும் சொல்லப்போனால், அவன் எந்த வேலைக்காரனுக்கும் பணிந் தடங்கியிருந்தானோ, அவனைவிட ஒன்றும் வித்தியாசமாகக் கருதப்படவில்லை.

தேவனால் மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரிடமும் தேவனுடைய சுபாவம் இருக்கிறது. அவர்கள் ஒரு புதிய சுபாவத்தையுடைய ஒரு புதிய சிருஷ்டிப்பு; அவர்கள் பரலோகத்திலிருக்கிற பிதாவினுடைய குடும்பத் தின் நேசப் பிள்ளைகள், அங்கத்தினர்கள். அவர்கள் பிதாவின் பிள்ளைகள். இந்த வைத்தல்மூலம்/தத் தெடுத்தல்மூலம் அவன் இன்னும் அதிக நேசப் பிள்ளையாக மாறிவிடுவதில்லை; அவன் ஏற்கெனவே பிறம்பால் அம்படி இருக்கிறான். அதற்குப் பதிலாக, இதற்குமுன் அவனிடம் இல்லாத குமாரத்துவத்தின் அந்தஸ்தையும், நிலைமையையும் அது அவனுக்கு வழங்குகிறது. இப்படி "குமாரனாக வைத்தல்" வயதுவந்த குமாரனை அங்கீகரிப்பதின் முத்திரையாகும்; அவனுடைய வளர்ச்சி மனதிலும், குணத் திலும் முழு முதிர்ச்சியை எட்டிவிட்டது (எபே. 1:13-14).

## கிறிஸ்து: முதற்பேறான குமாரன்

அநேக ஆண்டுகளுக்குமுன் நான் யூத மக்களிடையே சுவிசேஷத்தை அறிவிக்கும் வேலை செய்து கொண்டிருந்தேன்; அப்போது, யூதர்களுடைய வரலாற்றை ஆராய்ச்சிசெய்துகொண்டிருந்த ஓர் அன்

பான, வயதான மாணவரிடமிருந்து நான் ஒரு பாரம்பரியத்தைக் கற்றுக்கொண்டேன்; இந்தப் பாரம்பரியத்தை DeVern Fromke என்பவர் *Unto Full Stature* என்ற தன் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். கிறிஸ்து வாழ்ந்த காலத்தில், "தன் பிள்ளையைக் குமாரத்துவத்தின் முழு அந்தஸ்துக்குள்ளும், சிலாக்கியத்துக்குள்ளும் வைப்பதற்கு" சாட்சியாக யூதத் தகப்பன்மார்கள் ஒரு விசேஷமான விழா நடத்துவது பழக்கமாக இருந்திருக்கிறது. 13ஆவது வயதில் ஒரு குழந்தை நியாயப்பிரமாணத்தை வாசிக்கத் தொடங்கலாம்; அந்த அர்த்தத்தில் அவன் வளர்ந்த ஆள் என்று கருதப்பட்டான். இதற்கு Bar-Mitzvah என்று பெயர். நாம் பேசிக்கொண்டிருப்பதற்கும் Bar-Mitzvahவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. குமாரத்துவத்துக்குள் வைக்கும் இந்த நிகழ்ச்சி பொதுவாக ஏறக்குறைய 30ஆவது வயதில் நடந்தது.

தகப்பன் தன் பிள்ளை குமாரத்துவத்தை அடைந்ததைக் கொண்டாடுகிறான். அங்கு ஆசாரமான சடங்குகள் இருக்கும்: "இவன் என்னுடைய நேசகுமாரன், இவனில் நான் பிரியமாயிருக்கிறேன்," என்று தகப்பன் சொல்ல, விழா ஆரம்பிக்கிறது. (கிறிஸ்து ஞானஸ்நானம்பெற்றபோது பிதாவானவர் சொன்ன வார்த்தைகளை நினைத்துப்பாருங்கள்-மத்தேயு 3:16-17). இதைத் தொடர்ந்து அங்கு விருந்தும், கொண்டாட்டமும் வருகின்றன. அதன்பின், "இவன் நான் தெரிந்தெடுத்த என்னுடைய குமாரன்," என்று சொல்லி தகப்பன் பிள்ளையின்மேல் "குமாரத்துவத்தின்" முழு அந்தஸ்தையும், உரிமைகளையும் வைப்பான். (மறுரூப மலையில் பிதாவானவரின் வார்த்தைகளை நினைவுகூருங்கள்—லூக்கா 9:35). அந்த நேரத்திலிருந்து "குமாரன்" முழு வாரிசாகத் தன் சொந்த அதிகாரத்தில் நின்றான்—இனிமேல் அவன் தகம்பனுடைய பிள்ளை மட்டும் அல்ல; மாறாக, இப்போது அவன் முதிர்ச்சியடைந்த, உத்தமமான, அழைக்கப்பட்ட, தெரிந்துகொள்ளப்பட்ட குமாரன்.

இந்தப் பழக்கத்தின் முக்கியத்துவம்தான், இயேசுவின் வாழ்க்கையில் நடந்த இந்த சம்பவங்கள் அந்தப் பிராந்தியத்தில் அவருடைய பேசுதலைக் கேட்டவர்களிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் காரணம் என்று நான் விசுவாசிக்கிறேன். இந்தக் காரியங்கள் "குமாரத்துவத்தோடு" தொடர்புடையவை என்று அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

இந்த யூதர்கள் தங்களுக்குமுன்பாக வைக்கப்பட்ட இலக்கைப் புரிந்துகொண்டார்கள்; அந்தக் குமாரத்துவத்தைக்குறித்த பரிசுத்த ஆவியானவருடைய வேலையையும், பொறுப்பையும் அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். "அழைக்கம்பட்டவர்கள் அநேகர், *தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்*" (மத்தேயு 22:14) என்று இயேசு சொன்னபோது அந்த வார்த்தைகளை அவர்களால் "குமாரனாக வைப்பதோடு" தொடர்புபடுத்தமுடிந்தது.

**அநேகக் குமாரர்களை மகிமைக்குள் கொண்டுவருதல்**

"குழந்தையைம்போன்ற" அப்பாவித்தனத்தில் இருந்த ஆதாமை முதிர்ச்சிக்குள்ளும், பரிசுத்தத்துக்குள்ளும் கொண்டுவர வேண்டும் என்று தேவன் உத்தேசித்திருந்தார். ஆனால், ஆதாம் தோற்றுப்போனான். முற்றிலும் பிதாவானவருக்குக் கீழ்ப்படிவதற்கும், அவரைச் சார்ந்தும் இருப்பதற்குப்பதிலாக, அவன் தன் சுயாதீனத்தைப் பயன்படுத்தியதால் பாவம் செய்தான். இயேசு சிலுவையில் செய்த வேலையில்மூலம் பிதாவின் நீதியை நிறைவேற்றி, தம்மூலம் பிதாவிடம் வரப்போகிற எல்லாருக்காகவும் மீட்பின் விலையைச் செலுத்தினார். சிலுவையில் அவர் செய்துமுடித்த இந்த வேலையினாலும், நம் புதிய பிறப்பின்மூலமாகவும், பிதாவானவருக்குமுன் வீழ்ச்சிக்குமுன் ஆதாமிடம் இருந்த அதே அப்பாவித்தனத்துக்கு நாமும் மீண்டும் கொண்டுவரப்படுகிறோம்.

பிதாவின் வழிகள் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன; நாம் "குமாரத்துவத்தின்" முழு வளர்ச்சிக்கென்று பிதாவானவரின் வழிகளின்படி வளர்க்கப்பட பரிசுத்த ஆவியானவரின் பொறுப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறோம். நாம், கிறிஸ்து இயேசுவுக்குள், "உலகத்தில் நட்சத்திரங்களைப்போலப் பிரகாசிக்க" வேண்டும் என்பது இன்னும் தேவனுடைய நோக்கமாகும். பிதாவானவர் தம் தெரிந்தெடுத்தல்மூலம் நாம் குமாரர்களாக இருக்க வேண்டும் என்று வெளிப்படுத்தியிருக்கிறார்; அவருடைய இந்த முழு நோக்கம் நிறைவேறுவதற்காக குமாரர்களாக இருக்க அவர் நம்மை அழைக்கிறார் (ரோமர் 8:19: வெளி. 17:14).

எனவேதான் நம்மிடம் ஏற்கெனவே இல்லாததற்காக நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் என்று பவுல் வேம் டுகிறார்—இந்த நம்பிக்கைக்காக நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 8:24-25). இந்த

நம்பிக்கையை, இந்தக் குமாரத்துவத்தை, அடைய *“நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியைசெய்யக்கடவது,”* என்று யாக்கோபு நமக்கு ஆலோசனை வழங்குகிறார். நம்மைக் குமாரத்துவத்துக்கென்று நடத்துவதில் பரிசுத்த ஆவியானவர் வேலைசெய்வதற்கு நம்மை முற்றிலுமாகக் கையளிக்க நம்மை உற்சாகப்படுத்துவதற்காகவே எபிரேயரின் ஆசிரியர், *“ங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?”* என்று கூறுகிறார் (எபி. 12:7).

இதை மனதில் வைத்துத்தான், “*ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் குமாரர்களாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்,*” என்று இயேசு கூறினார் (யோவான் 12:36).

“*சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்,*” (மத்தேயு 5:9) என்று இயேசு கூறினார். இது தேவனுடைய குமாரர்கள் வெளிப்படப்போகிற, இன்னும் வரப்போகிற ஒரு நேரத்தைக் குறிக்கிறது. இதற்காகத்தான் “*சிருஷ்டியானவது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது*” (ரோமர் 8:19).

**குமாரர்களாக முதிர்ச்சியடைதல்**

பரிசுத்த ஆவியானவர் வெறுமனே தெய்வீக ஆசீர்வாதங்களை மட்டும் கொண்டுவருபவர் அல்ல. நாம் பிதாவானவருக்கு ஆசீர்வாதமாக இருக்க, நம்மைக் “குமாரர்களாக” மறுசாயலாக்க அவர் அனுப்பப்பட்டிருக்கிறார். ஆவிக்குரிய நிஜங்களைப் பார்க்க தம் வெளிப்பாட்டினால் நம் இருதயக் கண்களைப் பிரகாசிப்பதின்மூலம் பரிசுத்த ஆவியானவர் இதற்காக நம்மை வளர்த்து, ஆயத்தம்பண்ணுகிறார். அவர் தம் அன்பின் சிட்சையினால், இந்த நிஜங்களை நமக்குள் வீரியமுள்ளதாக்கி, நம்மைப் பிள்ளைகள் என்ற நிலைமையிலிருந்து “குமாரர்களாக” மறுசாயலாக்குகிறார்.

இந்த விஷயத்தில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்? “*அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருகிறது,*” என்று இயேசு கூறினார் (யோவான் 6:29). யூதர்களுடைய கேள்வியில் எண்ணற்ற கிரியைகள் அடங்கியிருந்தன; ஆனால், ஒரேவொரு கிரியைதான் செய்ய வேண்டும் என்று இயேசு பதிலளித்தார்.

“விசுவாசி” என்ற வார்த்தைக்கு “வெறுமனே நம்பவைத்தல், ஒருவர்மேல் நம்பிக்கைவைத்தல், ஒருவரைச் சார்ந்திருத்தல், வெறும் நம்பிக்கையைவிட அதிகமானது, முழுமையான நம்பிக்கையை ஏற்படுத்துதல்,” என்று பெரும்பாலும் கருதுகிறோம். இது அதின் செயல்படாத அர்த்தமாகும். இயேசு தம் முழு ஆள்தத்துவத்தையும் பிதாவின் சித்தத்துக்குக் கையளித்ததுபோல ஒருவன் “தன்னைக் கையளிப்பதுதான்” இதன் செயல்படுகிற பொருள்; இயேசு சொன்னதின் பொருள் இதுதான் என்று நான் விசுவாசிக்கிறேன்.

இந்த அர்த்தத்தில், நாம் நம்மை (புதிய சிருஷ்டிப்பை) முழுமையாக அவர் அனுப்பியவராகிய இயேசுவுக்கும், பரிசுத்த ஆவியானவர்மூலம் அவர் செய்கிற கிரியைக்கும், தொடர்ந்து ஒப்புக்கொடுக்க வேண்டும். இந்த முறையில் நம்மைப் பயிற்றுவிக்கவும், வளர்க்கவும் அனுப்பப்படவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது மட்டுமே முழுக் குமாரத்துவத்துக்கும் நாம் அவரால் மறுசாயலாக்கப்படுவோம்.

நாம் நம்முடையதாக உரிமைப்படுத்திக்கொள்கிற கிறிஸ்துவுக்குரிய எல்லாவற்றையும்குறித்து அநேகர் பேசுகிறார்கள். ஒரு வகையில் இது உண்மைதான். ஆனால், பிதாவானவர் கொடுத்திருக்கிற எல்லாவற்றையும், கிறிஸ்து மனுஷகுமாரன் என்ற முறையில் ஏற்கெனவே நம்முடைய உடமையாக்கியிருக்கிறார். இது அவருடைய வேலை. ஆனால், நாம் நம் பங்கைச் செய்ய வேண்டும்; ஏனென்றால், மனிதனுடைய சித்தத்துக்கு விரோதமாக தேவன் வேலைசெய்ய மாட்டார்.

பிதாவானவர் அனுப்பியிருக்கிறவருக்கு நாம் நம்மைக் கையளித்து, விசுவாசம் என்ற நித்திய நிலையில் நாம் இருக்க வேண்டும் என்பதே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிற ஒரே வேலையாகும். கிறிஸ்துவில் வாசம்பண்ணுதல் என்ற நிலையில் நாம் இருக்கையில், “குமாரர்கள்” என்ற முறையில் நம்மால் ஜெயங்கொள்ளும் வாழ்க்கையும் வாழ முடியும். கிறிஸ்துவின் இந்த ஜீவனை நம் சொந்தத் திட்டங்களுக்

காகவும், குறிக்கோள்களுக்காகவும் “உரிமைப்படுத்திக்கொள்ள” முடியாது; அதற்குப்பதிலாக, நாம் *“விசுவாசம்”* என்ற நித்திய நிலையில் இருக்கையில் அது நிஜமாக்கப்படுகிறது. இயேசு சொன்னது போல, “*ஆவியே உயிர்ப்பிக்கிறது; மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உம் டு*” (யோவான் 6:63-64).

ஒருவரும் ஓர் அனுமானத்தை இன்னொரு அனுமானத்தைக்கொண்டு இடமாற்றம் செய்யக்கூடாதென்றும், கிறிஸ்துவில் மட்டுமே நிறைவேறக்கூடியதை தங்கள் மாம்சத்தில் நிறைவேற்ற முயலக்கூடாதென்றும் நான் விரும்புகிறேன். மனிதனின் தவறான எண்ணங்களையெல்லாம் எறிந்துவிட்டு, எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து, வேதாகமத்தின் விசுவாசத்தில் நிலையாக வாழ நான் எல்லாரையும் உற்சாகம்படுத்த விரும்புகிறேன். மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; தத்தெடுக்கப்பட்ட மாம்சம் இன்னும் மாம்சமே; அதுவும் ஒன்றுக்கும் உதவாது. புது சிருஷ்டிப்பே காரியம். “*கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்*” (கலாத்தியர் 5:6).

சத்தியம் எங்களிடம் மட்டும்தான் இருக்கிறது என்று யாருமே சொல்ல முடியாது. கிறிஸ்துவுக்குள்ளான எல்லாரும் (அவருடைய சபை) பிதாவின் குறிக்கோளை நோக்கி திருயாத்திரை சென்றுகொண்டிருக்கிறோம். நமக்குத் தேவையான எல்லாவற்றையும் அவர் கிறிஸ்துவுக்குள் தந்திருக்கிறார். இந்த உலகத்தின் கருத்துக்களையோ அல்லது புரிந்துகொள்ளுதலையோ அல்லது அமைப்பையோபற்றிய எதுவும் நமக்குத் தேவையில்லை.

பிதாவாகிய தேவன் நமக்குத் தம் வார்த்தையைத் தந்திருக்கிறார்; நம்மைச் சகல சத்தியத்துக்குள் நடத்த அவர் தம் பரிசுத்த ஆவியானவரைத் தந்திருக்கிறார். வார்த்தையையும், ஆவியானவரையும் பிரிக்கமுடியாது; அவர்கள் சேர்ந்து ஒன்றாகவே வேலைசெய்கிறார்கள். அவர்களால்தான் நாம் கிறிஸ்துவின்மூலம் குமாரத்துவம் என்ற நிலைமைக்கு, ஜெயங்கொள்பவன் என்ற நிலைமைக்கு, வருகிறோம். ஜெயங்கொள்பவன் ஒரு குமாரன்; இவன், பழைய சுபாவம் செத்து சிலுவையிலறையம்பட்டதின்மூலம் கிறிஸ்துவுக்குரியவன்; இவன், ஆவியானவரால் வாழவும், ஆவியானவரால் நடக்கவும் கற்றுக்கொண்டிருக்கிறான் (கலாத்தியர் 5:24-25).

திருவெளிப்பாட்டின் வெற்றிகரமான முடிவுரையில் நம்மைக்குறித்த தேவனுடைய நோக்கத்தின் முழு நிறைவை நாம் பார்க்கிறோம்: “*அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீருற்றில் இலவசமாய்க் கொடும்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்*” (வெளி. 21: 6-7). ஆமென்.